RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
www.malaithanthi.in
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 21 | ஜனவரி.28 2026 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# கருப்பைவாய் புற்றுநோயை தடுக்க பள்ளி மாணவிகளுக்கு தடுப்பூசி ஸ்டாலின் தொடங்கி வைப்பு

சென்னை: ஜன.28-

கருப்பைவாய் புற்றுநோயை தடுத்திடும் வகையில் 30 ஆயிரம் பள்ளி மாணவிகளுக்கு HPV (Human Papilloma Virus) தடுப்பூசி வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்த முதல்வர் மு.க. ஸ்டாலின், தமிழ்நாடு புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு இயக்கத்தின் செயல் திட்ட ஆவணத்தை வெளி யிட்டார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தமிழ்நாட்டில், ஆறு நோய்களை தடுப்பதற்கான விரிவுபடுத்தப்பட்ட தடுப்பூசி திட்டம் 1978ல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தை மேலும் வலுப்படுத்துவதற்காக, நாடு தழுவிய தடுப்பூசி திட்டம் 1985ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. தடுப்பூசி திட்டத்தின் கீழ், 11 வகையான தடுப்பூசிகளை கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் அளித்து 12 வகையான தடுப்பூசியினால் தடுக்கப்படக்கூடிய நோய்களிலிருந்து பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

இந்தியாவில் ஆண்டுதோறும் சுமார் 1.2 லட்சம் பெண்களுக்கு கருப்பைவாய்ப் புற்றுநோய் புதிதாக கண்டறியப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் பெண்களை பாதிக்கும் புற்றுநோய்களில் மார்பக புற்றுநோய்க்கு அடுத்தபடியாக, கருப்பைவாய் புற்றுநோய் கண்டறியப்பட்டு வருகிறது. ஹெச்.பி.வி வைரஸ் (HPV - Human Papilloma Virus) தொற்றின் காரணமாக ஏற்படும் கருப்பைவாய் புற்றுநோயை ஹெச்.பி.வி தடுப்பூசி செலுத்துவதின் மூலம் தடுக்க இயலும்.

HPV (Human Papilloma Virus) தடுப்பூசி வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தல்: தமிழ்நாடு அரசின் 20252026 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், கருப்பைவாய் புற்றுநோயை தடுக்கவும், தமிழ்நாட்டில் அந்நோயினை அறவே அகற்றிடவும் HPV (Human Papilloma Virus) தடுப்பூசியை 14 வயதுடைய அனைத்து பெண் குழந்தைகளுக்கும் படிப்படியாக வழங்க அரசு



திட்டமிட்டுள்ளது. இதற்கென 2025 ஸ்ரீ 26 ஆம் ஆண்டில் 36 கோடி ஒதுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பின் தொடர்ச்சியாக, தடுப்பூசி திட்டத்தினை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்த 14 வயதுடைய 3,38,649 பெண் குழந்தைகளுக்கு HPV தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக (Pilot phase) கருப்பை வாய் புற்றுநோய் பாதிப்பு அதிகம் உள்ள தர்மபுரி, பெரம்பலூர், திருவண்ணாமலை மற்றும் அரியலூர் ஆகிய 4 மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அம்மாவட்டங்களில் உள்ள அரசு மற்றும் அரசு சார்ந்த பள்ளிகளில் 30,209 மாணவிகளுக்கு HPV (Human Papilloma Virus) தடுப்பூசி வழங்கும் திட்டத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார். அதன் தொடர்ச்சியாக, மாநிலம் முழுவதும் உள்ள எஞ்சிய மாவட்டங்களில் உள்ள 14 வயதுடைய பெண் குழந்தைகளுக்கு இத்தடுப்பூசி செலுத்தப்படும்.

தமிழ்நாடு புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு இயக்க செயல்திட்ட ஆவணம் வெளியீடு (Tamil Nadu Cancer Care Mission): புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பை மேம்படுத்த தமிழ்நாடு அரசு கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்து பல்வேறு முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. கட்டமைப்பு மேம்பாடு, ஆரம்பநிலை புற்றுநோய் கண்டறிதல், மற்றும் மேம்பட்ட சிகிச்சை வழங்குதல் உட்பட பல்வேறு அம்சங்கள் இதில் அடங்கும்.

புற்றுநோய் என்பது மக்களின் நலத்திற்கு பெரும் தீங்காக இருந்து வருகிறது. குறிப்பாக, வாழ்க்கைமுறை சார்ந்த மாற்றங்களால் ஏற்படும் புற்றுநோய்கள் அதிகரித்து வருவதால், ஒருங்கிணைக்கப்பட்ட விரிவான அணுகுமுறையை செயல்படுத்துவது அவசியமாகிறது.

தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டுள்ள தமிழ்நாடு புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு இயக்கமானது நோய் தடுப்பு, ஆரம்பநிலையில் கண்டறிதல், நோயறிதல், சிகிச்சை, வலி நிவாரண சிகிச்சை நீடித்த மற்றும் தரமான வாழ்வு ஆகியவற்றை உள்ளடக்கி, விரிவுபடுத்தி புற்றுநோயால் ஏற்படும் முன்கூட்டியே நிகழும் இறப்புகளைக் குறைப்பதை நோக்கமாக கொண்டுள்ளது.

ஒருங்கிணைந்த இந்த இயக்கத்தில், மேம்பட்ட தொழில்நுட்பங்கள், சமூகப் பங்களிப்பு மற்றும் புற்றுநோய் ஆராய்ச்சி ஆகியவற்றைப் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

புற்றுநோய் தாக்கத்தை குறைப்பதை நோக்கமாகக் கொண்ட இந்த புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு இயக்கத்தின் மூலம் வரும் 5 ஆண்டுகளில் பல தொலைநோக்கு மற்றும் புதுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது. இதன் முதல் நடவடிக்கையாக தமிழ்நாடு புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு இயக்கத்தின் செயல் திட்ட ஆவணத்தை முதல்வர் ஸ்டாலின் இன்றையதினம் வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சமூக நலன் ஸ்ரீ மகளிர் உரிமைத் துறை அமைச்சர் கீதாஜீவன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



## மதுரபாக்கம் ஊராட்சியில் 77 வது குடியரசு தின விழா

மதுரபாக்கம். ஜன.28

செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார் மலை ஒன்றியம், மதுரபாக்கம் ஊராட்சியில் (26.01.26) அன்று குடியரசு தின விழாவை முன்னிட்டு தேசிய மூவண்ண கொடியை ஏற்றி மதுரபாக்கம் ஊராட்சி மன்ற தலைவர்., வேல்முருகன் மற்றும் மதுரப்பாக்கம் ,அகரம் தென், திருவஞ்சேரி, ஒட்டியம்பாக்கம் ஊராட்சிகளின் ஒன்றிய கவுன்சிலரமான., அமுதா வேல்முருகன் தலைமையில் நடைபெற்ற விழாவில் மாணவ, மாணவியல் தங்களின் தனிதிறமைகளான பேச்சுப்போட்டி நடன நிகழ்ச்சி, நகைச்சுவை என மகிழ்ச்சியாக குடியரசு தினத்தை கொண்டாடி மகிழ்ந்தனர். இந்த நிகழ்வில் ஊராட்சி செயலர் மற்றும் ஊராட்சி பணியாளர்கள் மற்றும் ஊராட்சி கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினார்கள். உடன் ஊராட்சி ஒன்றிய, வார்டு உறுப்பினர்கள் மற்றும் திமுக கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். தொடர்ந்து சென்னை லோட்டரிகிளப் எக்ஸ்ப்ளோரா மற்றும் லோட்டரிகிளப் ஆப் சன்டேக்ஸ் சிட்டி சிங்கப்பூர் ஆகிய தொண்டு நிறுவனங்கள் இணைந்து மதுரப்பாக்கம் மற்றும் போலசேரி ஊராட்சியை தேர்ந்தெடுத்து ஊராட்சிக்கு தேவையான வசதிகளும், உதவிகளை செய்து கொடுக்க தாமாக முன் வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வில் ரோட்டரி கிளப் தலைவர்.,ரூபி , துணைத் தலைவர்.,ஜோயல், நிதியாளர்., ஹேமா மற்றும் முன்னாள் தலைவர்., ராணா, செயலாளர்கள். அஜித், வினாய் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



## சிவகங்கை சேர்மன் நகராட்சியில் தேசியக் கொடியை ஏற்றிவைத்து பரிசுகளை வழங்கினார்

சிவகங்கை, ஜன.28

சிவகங்கை77 வது குடியரசு தினவிழாவினை முன்னிட்டு சிவகங்கை நகர்மன்றத் தலைவர் சி. எம். துரை ஆனந்த் நகராட்சி வளாகத்தில் அமைந்துள்ள கொடிக்கம்பத்தில் தேசியக் கொடியினை ஏற்றிவைத்தும் , நகர்மன்ற நகராட்சி ஊழியர்களுக்கு நினைவுப்பரிசுகளை வழங்கியம் சிறப்பித்தார்..

நகராட்சி பள்ளி மாணவர்கள் கலைநிகழ்ச்சி நடைபெற்றது... கலந்து கொண்ட அனைவரையும் பாராட்டி புத்தகங்கள் உள்ளிட்ட பரிசுப் பொருட்களை வழங்கினார்...

நகராட்சி ஆணையாளர், அலுவலர்கள் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியின்போது கவுன்சிலர்களான ஜெயகாந்தன் , சி. எல். சரவணன் , மதியழகன் , இராமதாஸ் , நகர்மன்ற நியமன உறுப்பினர் செல்வராணி உள்ளிட்ட பள்ளி ஆசிரியர்கள், சுகாதார பணியாளர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்...



## சிவகங்கை நகரமே ஸ்தம்பித்தது... நாலூர் பொதுமக்கள் முற்றுகை...

சிவகங்கை, ஜன.28-

சிவகங்கை மாவட்டம் திருமாஞ்சோலை படமாத்தூர் அருகேயுள் இலுப்பக்குடி , அரசனூர், கிளாதரி, குமாரபட்டி, முடிகண்டம், தமறாக்கி ஆகிய கிராமப்புற விளைநிலங்களுக்கு அடியில் கிராஃபைட் எனப்படும் கனிம வளங்கள் அளவுக்கதிகமாக இருபபதைக் கண்டறிந்த ஒன்றிய அரசின் கனிமவளத்துறையானது சுமார் 63.5 ஹெக்டேர் நிலத்தை கடந்த 2023 நவம்பரில் கையகப்படுத்தியது...

ஏற்கனவே இப்பகுதியில் உள்ள விளைநிலங்கள் போக இந்தோ திபெத்தியன் பட்டாலியன் மையத்திற்காகவும் , சிட்கோ நிறுவனங்களுக்கு என சுமார் 1200 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தியது..

இதனிடையே விளைநிலங்களை கையகப்படுத்துவதை நிறுத்திடவும், கிராஃபைட் கனிமவளத்தை ஆய்வு செய்ய தனியார் நிறுவனத்திற்கு போடப்பட்ட ஒப்பந்தத்தை ரத்து செய்திடவும் கோரிக்கை வைத்த கிராமப் பொதுமக்கள் கணடன ஆர்ப்பாட்டம் உளளிட்ட பல்வேறு கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர்...

இன்னிலையில் ஓரிரு நாட்களுக்கு முன்னர் இலுப்பக்குடி கிராமத்தில் நடைபெற்ற கிராமசபைக்கூட்டத்தில் இதற்கான தனித்தீர்மானமே நிறைவேற்றியது குறிப்பிடத்தக்கது...

பல்வேறு வகையான போராட்டங்களை முன்னெடுத்த கிராம மக்கள் இன்று காலை சிவகங்கை நகர் மதுரை சாலை சந்திப்பு பகுதியான மதுரை முக்கு பகுதியிலிருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை கருப்புக் கொடியுடன் ஊர்வலமாக வந்தனர்...

தமிழ்நாடு விவசாய சங்க மாநில பொதுச்செயலாளர் சாமி நடராஜன் தலைமையில் நடைபெற்ற இந்த முற்றுகைப் போராட்டத்தில் கரும்பு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் சக்திவேல், ஒன்றிய செயலாளர் தவிச வேங்கையா , மாநில தலைவர் தவிச ரவீந்திரன் , மாவட்ட செயலாளர் வீரபாண்டி, மாநில துணைத்தலைவர் முத்துராமு , மாவட்ட தலைவர் ஆறுமுகம் , மாவட்ட பொருளாளர் விஷ்வநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்...

மேலும் பொதுமக்களுடன் இணைந்து அரசனூர் ஊராட்சி மேனாள் தலைவர், மாவட்ட திமுக மகளிரணி செல்வராணி அய்யப்பன், தமறாக்கி வடக்கு ஊராட்சி மேனாள் தலைவர் தமறாக்கி ரவி, மூத்த வழக்கறிஞர் அரசனூர் இளங்கோவன் , திமுக மாவட்ட பிரதிநிதி தியாகராஜன் , ஒன்றியக்குழு மேனாள் உறுப்பினர்களான அழகர்சாமி, தமறாக்கி வழக்கறிஞர் பாலா என்ற பாலமுருகன் , திமுக ஒன்றிய பொருளாளர் அர. உசிலம்பட்டி பாண்டியராஜா, ஒன்றிய ஐடி விங் அமைப்பாளர் தமறாக்கி அம்பலம் , இலுப்பக்குடி திமுக கிளைக்கழகச் செயலாளர் முத்துச்சாமி , அரசனூர் ராஜா , வழக்கறிஞர் இள.சரவணன் உள்ளிட்ட திமுக , கம்யூனிஸ்ட், அதிமுக, பாஜக, விசிக, தவெக மற்றும் பள்ளி மாணவ, மாணவியர்கள் உள்ளிட்ட அனைத்து கட்சியினரும் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டனர்...

இதனிடையே போராட்டத்தில் கலந்து கொண்ட சடடமன்ற உறுப்பினர் செந்தில்நாதன், பாஜக மாவட்ட மேனாள் தலைவர் மேப்பல் சக்தி ஆகியோர் கலந்து கொண்டு திட்டத்தை கைவிடுமாறு பேசினர்...

ஐந்தாயிரம் பேர் கலந்து கொண்ட இந்த போராட்டத்தினால் சிவகங்கை திருப்புத்தூர் சாலையில் சுமார் இரண்டு மணிநேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது...

இதுகுறித்து நம்மிடம் பேசிய பலரும் மத்திய பாஜக அரசின் இந்த திட்டத்தை உடனடியாக கைவிடுமாறும் , தங்களது விவசாய நிலங்களையும் வாழ்வாதாரத்தையும் பறித்து எதைச் சாதிக்க போகிறது என்ற கேள்வியையும் முன்வைக்கின்றனர்.





## வேங்கடமங்கலம் ஊராட்சியில் கிராம சபை கூட்டம்

வேங்கடமங்கலம் ஜன.28

செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்குளத்தூர் ஒன்றியம், வேங்கடமங்கலம் ஊராட்சியில் கிராம சபை கூட்டம் (ஜனவரி: 26) ஊராட்சி மன்ற தலைவர்., கல்யாணி இரவி தலைமையில் ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. கிராம சபை கூட்டத்தில் ஊராட்சி செயலர்., வளர்மதி அனைவரின் முன்பு நிறைவேற்றப்பட்ட பட்டியலில் விபரங்களை படித்துக் காட்டினார். தொடர்ந்து பொதுமக்கள் இதுவரை நடைபெற்று நிறைவடைந்த பணிகளுக்கு நன்றி தெரிவித்து ஊராட்சி மன்ற தலைவரை பாராட்டினார்கள். தொடர்ந்து கிராம பொதுமக்கள் தங்களின் கோரிக்கைகளை மனுக்களாக அளித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மழைக்காலங்களில் டெங்கு விழிப்புணர்வு பற்றி பொதுமக்களுக்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையை கிராம சபை கூட்டத்தில் ஊராட்சி செயலர்., வளர்மதி எடுத்துரைத்தார் .தொடர்ந்து குடியரசு தினத்தை முன்னிட்டு பொன்மார் ஊராட்சிகளில் குப்பை இல்லாத தூய்மையான ஊராட்சியாக மாற்றிக் காட்டுவோம் என்று அனைவரும் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.உடன் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் மற்றும் ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



## தைப்பூச மண்டகப்படிக்கு உற்சாகமாக புறப்பட்ட த.ம.மு.க. தொண்டர்கள்

நிலக்கோட்டை, ஜன.28 :

திண்டுக்கல் மாவட்டம் பழனி பால தண்டாயுதபாணி திருக்கோவிலில் ஆண்டுதோறும் நடைபெறும் தேவேந்திரகுல வேளாளர் தைப்பூச மண்டகப்படியில் கலந்து கொள்ள தமிழக மக்கள் முன்னேற்றக் கழக தொண்டர்கள் உற்சாகத்துடன் புறப்பட்டுச் சென்றனர். தமிழக மக்கள் முன்னேற்றக் கழக தலைவர் ஜான்பாண்டியனுக்கு தைப்பூச மண்டகப்படியை முன்னிட்டு பரிவட்டம் கட்டி முதல் மரியாதை செய்யப்படுவது வழக்கம். இதனை முன்னிட்டு நிலக்கோட்டை தமிழக மக்கள் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. நிலக்கோட்டை த.ம.மு.க. திண்டுக்கல் மாவட்டத் தலைவர் முருகவேல் பாண்டியன் தலைமையில், மாவட்டச் செயலாளர் ஸ்டாலின் முன்னிலையில், 20க்கும் மேற்பட்ட வாகனங்களில் சுமார் 400க்கும் மேற்பட்டோர் பழனிக்கு புறப்பட்டனர். இந்த நிகழ்ச்சியை ஒன்றிய செயலாளர் இளையராஜா ஒருங்கிணைத்தார். இதில் மாவட்ட பொருளாளர் சரவணகுமார், மகளிர் அணி பொறுப்பாளர்கள் சத்யஜோதி, பிரவீனா, விவசாய அணி பொறுப்பாளர் தங்கராஜ், இளைஞர் அணி பொறுப்பாளர்கள் ராஜீவ்காந்தி, ரஞ்சித், ராஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# திருப்பூர் மாவட்டம் குடியரசு தினவிழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே தேசியக் கொடியை ஏற்றி விழா விழாவினை தொடங்கி வைத்தார்

திருப்பூர், ஜன.28-

திருப்பூர் மாவட்டம், சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய மாவட்ட விளையாட்டு அரங்கில் (26.01.2026) அன்று குடியரசு தினவிழா மிகவும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர் மனிஷ் நாரணவரே தேசியக்கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

பின்னர், சுதந்திர போராட்ட தியாகிகள் மற்றும் வாரிசு தாரர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்கள். சிறப்பாக பணிபுரிந்த 206 அரசு அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் மாநகர காவல் ஆணையர் அலுவலகம் சார்பில் 61 காவலர்களுக்கு நற்சான்றித ழ்களுகம், மாவட்ட காவல் கண்கா ணிப்பாளர் அலுவலம் சார்பில் 28 காவலர்களுக்கு காவலர்களுக்கு நற்சான்றி தழ்களும் என மொத்தம் 295 நபர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே வழங்கினார்கள்.

விழாவில், மாவட்ட மாற்றுத்திறனாளி நலத்துறையின் சார்பில் 01 பயனாளிக்கு ரூ.1,06,000/ மதிப்பீட்டில் இணைப்பு சக்கரம் பொருத்திய பெட்ரோல் ஸ்கூட்டரையும், மாவட்ட தொழல் மையம் சார்பில் 02 பயனாளிக்கு ரூ.2.02 கோடி மதிப்பீட்டில் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ் கடனுதவியையும், 01 பயனாளிக்கு ரூ.82.99 இலட்சம் மதிப்பீடடில் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடனுதவியையும், 01 பயனாளிக்கு ரூ.93,000/ மதிப்பீடடில் கலைஞர் கைவினைத்திட்டத்தின் கீழ் கடனுதவியையும்,

தமிழ்நாடு ஆதிதிரா விடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டு கழகம் (தாட்கோ) சார்பில் 05 பயனாளிகளுக்கு ரூ.39,61,518/ மதிப்பீட்டில் முதலமை ச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்கு டியினர் சமூக பொருளாதார மேம்பாட் டிற்கான தொழில் முனைவு திட்டத்தின் கீழ் கடனுத வியையும், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் சார்பில் 21 பயனாளிகளுக்கு ரூ.5,19,600/ மதிப்பீட்டில் கல்வி, திருமணம், இயற்கை மரணம் மற்றும் ஓய்வூதிய உதவித்தொகையினையும், வேளாண்மைத்துறையின் சார்பில் தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் நுண்ணீர் பாசன திட்டம், உழவு மானியம், சொட்டுநீர் பாசனம் மற்றும் முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னு யிர் காப்போம் திட்டத்தின் கீழ் 06 பயனா ளிகளுக்கு ரூ.2,21,802/ மதிப்பீட்டிலும், வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் வேளா ண்மை இயந்திரமாக்குதல் உப இயக்கம் கீழ் 02 பயனாளிகளுக்கு ரூ.1,91,397/ மதிப்பீட்டிலும், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 05 பயனாளிகளுக்கு ரூ.33,450/ மதிப்பீட்டில் தையல் இயந்திரங்களையும்,, மாவட்ட பிற்படுத்த ப்பட்டோர் மற்றும் சிறுபான் மையினர் நலத்துறையின் சார்பில் 02 பயனாளிகளுக்கு ரூ.10,414/ மதிப்பீட்டில் விலையில்லா தையல் இயந்திரங்களையும், 05 பயனாளிகளுக்கு ரூ.43,905/ மதிப்பீட்டில் விலையில்லா சலவைப்பெட்டிகளையும் என மொத்தம் 51 பயனா ளிகளுக்கு ரூ.3,36,05,116/ மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் டாக்டர் மனிஷ் நாரணவரே வழங்கினார்கள்.

இவ்விழாவில், திருப்பூர் மாநகர காவல் ஆணையர் எஸ்.ராஜேந்திரன் , மாவட்ட காவல் கண்காணிப்பாளர் .யாதவ் கிரிஸ் அசோக் மாவட்ட வருவாய் அலுவலர் தக.கார்த்திகேயன், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) க.சங்கமித்திரை, திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர்கள் (திருப்பூர்) சிவபிரகாஷ், (உடுமலைப்பேட்டை) குமார், மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், துணை ஆட்சியர்கள், காவல்துறையினர், அனைத்து துறை அரசு அலுவலர்கள், பொது மக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.





## உற்சாகம் நூல் வெளியீட்டு விழா

சிவகங்கை, ஜன.28-

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்க கல்லல் கிளை சார்பாக உற்சாகம் நூல் வெளி யீட்டு விழா சிவகங்கை மாவட்டம் கல்லல் விஜெயம் அரங்கத்தில் நடைபெற்றது. இந்நூலில் 20 புதிய எழுத்தாளர்கள் உள்ளிட்ட 27 பேர் தங்கள் கட்டுரை களை எழுதியுள்ளனர்.

இது வலங்கைமான் மௌவல் பதிப்பகத்தின் 150 வது நூல் என்பதும், சிவகங்கை மாவட்ட எழுத்தாளர் மகா பிரபு வின் 14 ஆவது நூல் என்பதும், அவர் தொகுத்த 5 ஆவது நூல் என்பதும் குறிப்பிடத்தக்கது. தனது 5 தொகுப்பு நூல்கள் மூலம் இதுவரை 55 பெண்கள் உட்பட 104 பேரை தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்தியுள்ளார்.

இந்நூலை திருப்பத்தூர் பாபா குரூப் பவுண்டேசன் நிறுவனர் ஹாஜி பாபா அமீர் பாதுஷா, பள்ளிக்கல்வித் துணை ஆய்வாளர் இராதாகிருஷ்ணன், கல்லல் சாந்திராணி மேல்நிலைப்பள்ளி முதல்வர் அருட்சகோதரி சுதா, தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி ஆகியோர் வெளியிட மத்திய அரசு வழக்கறிஞர் முருகேசன், சிவகங்கை ஆசிரியர் பயிற்றுநர் காளிராசா, தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள்




சங்க சிவகங்கை மாவட்டத் தலைவர் சிபூ, கண்ட்ரமாணிக்கம் தண்டாயுதபாணி பள்ளி ஆசிரியர் திருமலை ராஜன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

இந்நூலில் கட்டுரை களை எழுதி முருகேசன் விஜயலட்சுமி சிவக்குமார் மாரிச்செல்வி ஜசக்சம்ராஜ் உமா மாலினி ஜெயக்கொடி ஷாலினி மதுரம் தீபிகா பிரதீப்சம்ரஜ் விஜயராணி கவிபாரதி மணிமேகலை பழனியப்பன் ராமசாமி நவீன் கார்த்திகேயன் காளீஸ்வரன் நாகஜோதி சேவியர் எழில் அரசன் நாச்சியப்பன் ஆகியோர் புதிய எழுத்தாள ணர்களாக அறிமுகமாயினர்.

நாகரத்தினம் நித்யா சித்ராதேவி சிவக்குமார் மாரீஸ் கணேசன் ஆகியோரின் படைப்புகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

அருட் சகோதரி ரெஜினா, சீதாலட்சுமி, மருதநாயகம், விநாய கமூர்த்தி வாழ்த்துரை வழங்கினர். லக்ஷிகா வரவேற்பு நடனமும், பாரத் விஜயன் தேசப்பற்று நடனமும் ஆடினர், கார்த்திகேயன் நன்றி கூறினார். ஆசிரியை நித்யா நிகழ்ச்சியை ஒருங்கி ணைத்தார்.



■ திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட வெள்ளானூர் ஊராட்சியில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது. 77வது குடியரசு தினத்தை முன்னிட்டு தேசிய கொடியை ஏற்றிய பின்பு வெள்ளானூர் ஆரிக்கமேடு லட்சுமி நகர் அருகில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் கிராம பொதுமக்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தினர். கிராம ஊராட்சி வளர்ச்சியின் அவசியத்தை கருத்தில் கொண்டு கோரிக்கைகளை நிறைவேற்றி தருவதாக வருகை தந்த அரசு அதிகாரிகள் கூறியுள்ளனர். மற்றும் வெள்ளனூர் ஊராட்சிக்கு உட்பட்ட வடுகர் காலனி என்பதற்கு பதிலாக டாக்டர் அம்பேத்கார் நகர் என அழைக்கப்படும் வேட்டைக்கார பாளையம் என்பதற்கு பதிலாக டாக்டர் அப்துல் கலாம் நகர் என அழைக்கப்படும் வெள்ளானூர் காலனி என்பதற்கு பதிலாக வெள்ளானூர் என்ற சொல் மட்டுமே பயன்படுத்தப்படும் என அறி வித்தனர் வெள்ளானூர் ஊராட்சி செயலாளர் தமிழ்ச்செல்வன், தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பத்மநாதன், லட்சுமி நகர் குடியிருப்போர் நல சங்க தலைவர் ராஜ், செயலாளர் நந்தகோபால், பொருளாளர் ஸ்டீபன், மாற்றுத்திறனாளி சங்கத் தலைவர் முருகானந்தம், மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் சுகாதாரத்துறை அதிகாரிகள், கிராம பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




## குடியரசு தின விழாவை முன்னிட்டு சிறப்பு கிராம சபை கூட்டம்

நிலக்கோட்டை, ஜன.28-

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை கோட்டூர் ஊராட்சி மன்றம் சார்பில் குடியரசு தின விழாவை முன்னிட்டு செங்கல்பட்டி கிராமத்தில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது. இதில் கோட்டூர் ஊராட்சி மன்றத்தில் வரவு செலவு தணிக்கை, மற்றும் தமிழக அரசின் திட்டங்கள் பற்றி கோட்டூர் ஊராட்சி மன்ற செயலாளர் பாண்டியராஜன் எடுத்துரைத்தார். மேலும் மகாத்மா காந்தி 100 நாள் வேலை திட்டம் மற்றும் கலைஞர் கனவு இல்லம் திட்டம் செயல்படுத்தப் போவது பற்றியும் எடுத்துரைத்தார். இந்த சிறப்பு கிராம சபை கூட்டத்தில் கோட்டூர் ஊராட்சியை சுற்றியுள்ள ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர். கோட்டூர் ஊராட்சி பற்றாளர் பாலசுப்ரமணி கிராம நிர்வாக அலுவலர், விவசாயத்துறை அதிகாரிகள் பள்ளி தலைமை ஆசிரியர் , மக்கள் பணிந்தலா பொறுப்பாளர்கள் என ஏராளமான கலந்து கொண்டனர்.

### குடியரசு தினவிழாவை முன்னிட்டு தேனி மாவட்ட விளையாட்டு அரங்கத்தில்

# தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் தேசியக்கொடியை ஏற்றி வைத்து காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றார்

தேனி, ஜன.28-

குடியரசு தினவிழாவை முன்னிட்டு, தேனி மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் தேசியக்கொடியை ஏற்றி வைத்து காவல்துறை யினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றார். உடன் தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்ரீகூஜ்.ஙி.சினேஹாப்ரியா மற்றும் காவல்துறை அதிகாரிகளும் தேசிய கொடிக்கு மரியாதை செலுத்தினர்.




ஆயுதப்படை காவல் ஆய்வாளர் S.ஜெயச்சந்திரன் தலைமையில் காவல் அணிவகுப்பு மரியாதை நடைபெற்றது. இதனையடுத்து தேனி மாவட்டத்தில் பல்வேறு பிரிவுகளில் பணிபுரியும் 84 காவல் துறையினருக்கு முதலமைச்சரின் காவலர் பதக்கமும், சிறப்பான முறையில் பணிபுரிந்த 50 காவல்துறை அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார்..



■ திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் ஊராட்சி, ஒன்றியத்துக்கு உட்பட்ட மோரை ஊராட்சியில், கிராம சபை கூட்டம் நடைபெற்றது. 77வது குடியரசு தினத்தை முன்னிட்டு தேசிய கொடியை ஏற்றிய பின்பு வீராபுரம் சமுதாய நலக்கூடத்தில், நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் கிராம பொதுமக்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தினர், கிராம ஊராட்சி வளர்ச்சியின் அவசியத்தை கருத்தில் கொண்டு கோரிக்கைகளை நிறைவேற்றி தருவதாக வருகை தந்த அரசு அதிகாரிகள் கூறியுள்ளனர். மோரை ஊராட்சி செயலாளர் வீரபத்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திருவள்ளூர் மாவட்ட ஊரக வளர்ச்சித்துறை, உதவி திட்ட அலுவலர் முத்துசுந்தரம், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் செல்வ சுந்தரி, கிராம நிர்வாக அலுவலர் தியாகராஜன் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# காளையார்கோவில் வடக்கு ஒன்றியம் வீராணியில் படிப்பகத்தை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் திறந்து வைத்தார்

காளையார் கோவில், ஜன.28-

சிவகங்கை மாவட்ட திமுக வின் மூத்த முன்னோடிகளில் ஒருவரான காளையார்கோவில் வடக்கு ஒன்றியம் வீராணி கிளைக்கழக அவைத் தலைவர், இப்பகுதி மக்களால் பசுமை நாயகர் என்று அன்போடு அழைக்க ப்படும் கழக மூத்த முன்னோடி, சுற்றுப்புற சூழல் ஆர்வலர் வீர. அங்கமுத்து அம்பலம் குடும்பத்தினரால் புதிதாக அமைக்கப்பட்ட கலைஞர் நூற்றாண்டு படிப்பகத்தை மாண்புமிகு தமிழ்நாடு கூட்டுறவுத் துறை அமைச்சர், சிவகங்கை மாவட்ட திமுக செயலாளர் கேஆர். பெரியகருப்பன் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி, குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார்..



காளையார்கோவில் வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் ஆர். எம். கென்னடி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியை வடக்கு ஒன்றிய வழக்கறிஞரணி அமைப்பாளர் வழக்கறிஞர் சதீஷ்குமார் வரவேற்புரை நிகழ்த்தினார்.

அங்கமுத்து அம்பலம் அவர்களின் மகனான ஆசிரியர் பாலகுருநாதன், மனைவி ஆசிரியை கற்பகம் ஆகியோரது முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் காளையார்கோவில் வடக்கு ஒன்றிய செயலாளர் ஆர்.எம். கென்னடி நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

இதனிடையே பேசிய அமைச்சர் பெரியகருப்பன் ஒரு மனிதன் வளர்வதற்கு முழுக்க முழுக்க கல்வி ஒன்று மட்டுமே ஆகச் சிறந்த வாழ்வியலைக் கொடுக்கிறது எனவும் இப்படிப்பட்ட சின்னஞ் சிறிய கிராமத்தில் வழக்கறிஞர்களாகவும், பட்டப்படிப்புகளை படித்து மற்பல துறைகளில் சிறந்தவர்களாக விளங்கி வருவதாகவும் குறிப்பிட்டார், மேலும் அப்பேர்ப்பட்ட கல்விக்கு தன்னால் இயன்ற உதவிகளைச் செய்ய முன்வந்திருக்கும் , கல்வியின் முக்கியத் துவத்தை உணர்ந்து செயல் படும் வீர. அங்கமுத்து குடும்பத் தினருக்கு தனது நெஞ் சார்ந்த நன்றிகளையம், வாழ்த்துகளையும் தெரி வித்துக் கொள்வதாகவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர் சேர்மன் சேங்கைமாறன், ஒன்றிய அவைத்தலைவர் துருவம்பட்டி சுப. தமிழரசன் , ஒன்றியப் பொருளாளர் கீழக்கோட்டை கண்ணன், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் பவானி கணேசன் , வீராணி கிளைக்கழகச் செயலாளர் சரவணன், கழக மூத்த முன்னோடி, மேனாள் பேரூர்க்கழகம் ரைஸ்மில் கணேசன், நீர்ப்பாசன சங்கத் தலைவர் அல்லூர் ரவிச்சந்திரன், கீரனூர் தமிழ்ச்செல்வம் ஒன்றிய வழக்கறிஞரணி அமைப்பாளர் வீராணி சதீஷ் குமார் , ஒன்றிய இளைஞரணி இராணியூர் கர்ண. அருண்குமார், சைதை அசோக் , கழக மூத்த முன்னோடி பாண்டி, கிளைக்கழக இளைஞரணி நிர்வாகிகள் வெங்கடாஜலபதி,ராமன், இளையராஜா, லெட்சும ணன், பனங்காடி பாண்டி, சூரவெத்தி மாரியப்பன், விஜய மாணிக்கம் பூமிநாதன், அல்லூர் இராமலிங்கம், சோலை செந்தில் வேல் , இலுப்ப க்கோட்டை தனுஷ் கோடி, முத்துப்பட்டனம் கர்ணன் உள்ளிட்ட சுமார் 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

கலந்து கொண்ட அனைவருக்கும் அசைவ அறுசுவை உணவு, தேனீர் உள்ளிட்ட உணவுப் பொருட்கள் பறிமாறப்பட்டன.

நிகழ்ச்சி ஏற்பாடுகை வீர. அங்கமுத்து அம்பலம், அவரது மகனான ஆசிரியர் பாலகுருநாதன் , மருமகள் ஆசிரியை கற்பகம் , பேத்திகளான கேஷவர்த்திணி , காணு ஸ்ரீ, ஜனார்த்தணி உள்ளிட்ட குடும்பத்தினர் மிகவும் சிறப்பாகச் செய்திருந்தனர்.



# பெரியகுளம் அருகே தேனி கிழக்கு மாவட்ட அதிமுக மாணவரணி சார்பில் மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க பொதுக்கூட்டம்

பெரியகுளம், ஜன.28-

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே உள்ள சருத்துப்பட்டி எம்.ஜி.ஆர் திடலில் அதிமுக கிழக்கு மாவட்ட மாணவரணி சார்பில் மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பின்பு மொழிப் போர் தியாகிகள் உருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. பின்பு தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தப்பட்டது. இந்த பொதுக்கூட்டத்தில் மாவட்ட மாணவரணி செயலாளர் தினேஷ்குமார் தலைமை தாங்கினார். பெரியகுளம் மேற்கு ஒன்றிய மாணவரனி செயலாளர் ஆர்.பாலசுப்பிரமணியன் வரவேற்புரை ஆற்றினார். ஒன்றிய செயலாளர்கள் வடபுதுப்பட்டி அன்னபிரகாஷ் , வடுகபட்டி ராஜகுரு நகர செயலாளர்கள் தேனி கிருஷ்ணகுமார் பெரியகுளம் பழனியப்பன் ஆகியோர் முன்னிலை வசித்தனர். இக்கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கிழக்கு மாவட்ட செயலாளர் முறுக் கோடை இராமர் கழக செய்தி தொடர்பாளர் அண்ணாத்துரை, தலைமை கழக பேச்சாளர்கள் பரமசிவன், சுந்தர்ராஜ் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். இந்த கூட்டத்தில் கழக அம்மா பேரவை துணை செயலாளர்கள் ஜெயக்குமார், முன்னாள் எம்எல்ஏ பெரிய வீரன், கழக மருத்துவ அணி இணை செயலாளர் டாக்டர் அனுமந்தன், மாவட்ட இணை செயலாளர் முத்துலட்சுமி, மாவட்ட துணை செயலாளர் சோலைராஜ், ஆண்டிபட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் வரதராஜன், கம்பம் ஒன்றிய செயலாளர் ஈஸ்வரன், கடமலை மயிலை வடக்கு ஒன்றிய செயலாளர் செந்தட்டி காளை, பொதுக்குழு உறுப்பினர் தவமணி கருப்பசாமி, மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் மதுரை மண்டல தொழில்நுட்ப பிரிவு துணைத் தலைவர் ஏ எஸ் ஆர் பாலச்சந்தர், இலக்கிய அணி வழக்கறிஞர் தவமணி, இளைஞர், இளம் பெண் பாசறை அப்பாஸ் மைதீன், சிறுபான்மை பிரிவு முகமது சலீம், தகவல் தொழில்நுட்ப பிரிவு துரைப் பாண்டி, ஒன்றிய அவை தலைவர் முத்துச் சாமி, பேரூர் கழக செயலாளர்கள் வடுகபட்டி பாலமுருகன், தென்கரைபேரூர் கழகச் செயலர் ஆண்டவர், தாமரைக்குளம் மனோகரன், தேனி நகர துணை செயலாளர் சுந்தர பாண்டியன், பெரியகுளம் நகர துணை செயலாளர் வெங்கடேஷ், பெரியகுளம் அம்மா பேரவை செயலாளர் ஜெயசீலன், மாவட்ட பிரதிநிதி விஜய் ஆனந்த், ஒன்றிய துணை செயலாளர் செல்லபாண்டியன், மற்றும் அதிமுக மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக, பொறுப்பாளர்கள், பொதுமக்கள்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். இக்கூட்ட முடிவில் மாணவரனி துணை செயலாளர் சேகர் நன்றி கூறினார்.





# தேவகோட்டை எஸ்ஜபி அபாகஸின் முதலாம் ஆண்டு ஆண்டு விழா



தேவகோட்டை ஜன.28-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை எஸ்ஜபி அபாகஸ் நிறுவனத்தின் சார்பாக முதலாம் ஆண்டு ஆண்டு விழா கொண்டாடப்பட்டது இவ்விழாவில் சிவகங்கை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செந்தில்நாதன் காரைக்குடி ஸ்பார்டன் சிஏ அகாடமி நிறுவனர் ஆடிட்டர் திருப்பதி தெண்ணீர் வயல் கிராம நிர்வாக அலுவலர் ரொட்டேரியன் சந்திரசேகரன் முதலானோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர் இவ்விழாவில் பேசிய சிவகங்கை சட்ட மன்ற உறுப்பினர் செந்தில்நாதன் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்காக சென்னை போன்ற பெருநகரங்களில் இருக்கும் கல்விச் சூழல் தற்போது நமது ஊரிலும் எஸ்ஜபி அபாகஸ் போன்ற நிறுவனங்கள் சாத்தியமாக்கித் தருவதை கண்கூடாகக் காண்கிறேன் குழந்தைகளின் அபாரமான மூளை செயல்பாடு ஞாபகத்திறன் கண்டு வியப்படைந்தேன் இதனை தேவகோட்டைக்குக் கொடுத்த இளைஞர்களுக்கு வாழ்த்துகள்இது சிவகங்கை மாவட்டம் முழுவதும் பரவ வேண்டும் எனப் பேசினார் மற்றொரு சிறப்பு விருந்தினரான ஆடிட்டர் திருப்பதி அவர்கள் பேசுகையில் சீனா ஜப்பான் போன்ற நாடுகளில் இளைஞர்கள் அறிவுத் திறனில் மேம்பட்டவர்களாக விளங்குவதற்குக் காரணம் அவர்களின் ஆரம்பக் கல்வி நிலையிலேயே அபாகஸ் இருக்கின்றது அதுபோல நம் இந்தியாவிலும் ஆரம்பக் கல்வியிலேயே அபாகஸ் முழுவதுமாக வருதல் அவசியம் இதன் மூலம் குழந்தைகளுக்கு நினைவுத்திறன் தன்னம்பிக்கை சுறுசுறுப்பு எடுத்த காரியத்தில் முழுமையான ஈடுபாடு ஆகியவை ஏற்படும் இதனைப் பெற்றோர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார் அடுத்தாகப் பேசிய கிராம நிர்வாக அலுவலர் ரொட்டேரியன் சந்திர சேகரன் பெற்றோர்கள் குழந்தைகளோடு தங்கள் நேரத்தைச் செலவிட வேண்டும் குழந்தைகளுக்கு மொபைல் போன் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும் குழந்தைகளுக்காக எங்கெல்லாம் சிறப்பு வகுப்புகள் நடத்தப்படுகிறதோ அங்கெல்லாம் தங்கள் குழந்தைகளைச் சேர்த்துப் போட்டி நிறைந்த இன்றைய உலகில் அவர்கள் வெற்றிக்கு வழிவகுக்க வேண்டும் இதனை பின்பற்றினாலே அறிவில் சிறந்தவர்களாக குழந்தைகள் மேம்பட்டு விளங்குவார்கள் எனப் பேசினார் முன்னதாக எஸ் ஐ பி அபாகஸின் திருச்சி மண்டல மற்றும் மதுரை மண்டல தலைமை செயல் அதிகாரிகள் சுந்தர் கிருஷ்ணமூர்த்தி சுதர்சனன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்தனர் இவ்விழாவில் காலை முதல் 6 வயது முதல் 12 வயதுக்கு உட்பட்டோருக்கான மாநில அளவிலான ஓவியப் போட்டிகள் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன விழாவிற்கான ஏற்பாடுகளை தேவகோட்டை எஸ்ஜபி அபாகஸின் தலைமை பொறுப்பாளர் சரண்யா அதன் பயிற்றுநர்கள் செய்திருந்தனர்..





■ திருவள்ளூர் மாவட்டம், புழல் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 77வது குடியரசு தினத்தை முன்னிட்டு தேசிய கொடியை, புழல் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் பார்த்தசாரதி கொடியேற்றி வைத்தார். பின்பு காந்தி, அம்பேத்கர் இவர்களது திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் புழல் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர், ஆணையாளர் கி.வேதநாயகி மற்றும் அலுவலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர். இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது.

# குதிரை, கழுதை வளர்க்க உரிமம் கட்டாயம்: புதிய வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டது தமிழ்நாடு அரசு



சென்னை, ஜன.28-

குதிரை சவாரி, குதிரை இனம் சார்ந்த விலங்குகளுக்கான வழிகாட்டு நெறிமுறைகளை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது. சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் தமிழக அரசு வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது. அதில்; குதிரை, கழுதைகளை பயன்படுத்துபவர்கள் மாநகராட்சி நிர்வாகத்திடம் உரிமம் பெற வேண்டும். அதிக எடைகளை ஏற்றினால் உடனடியாக குதிரை, கழுதை உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்படும். மகிழ்ச்சியான குதிரை சவாரி, திருமணத்துக்காக பொருட்களை சுமப்பதற்காக பயன்படுத்துவது குறித்து தெளிவாக குறிப்பிட்டு உரிமம் பெற வேண்டும்

குதிரை வளர்க்கும் நிறுவனங்களும் குதிரையை வைத்திருப்பவர்களும் குதிரையையும் தமிழ்நாடு விலங்கு நல வாரியத்தில் பதிவு செய்ய வேண்டும். குதிரை உரிமையாளர்கள், நிறுவனங்கள் மீது வழக்கு எதுவும் இருக்க கூடாது. குதிரைகள் முறையாக பராமரிக்கப்படாவிட்டால் பயன்படுத்த தடை விதிக்கப்படும். விலங்கு வதை தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.





# பெரியகுளம் அருகே தேவனப்பட்டியில் அருள்மிகு மூங்கில் அன்னை காமாட்சி அம்மன் கோவில் மகா சிவராத்திரி திருவிழா கொடியேற்றும் நிகழ்ச்சி

பெரியகுளம், ஜன.28-

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே உள்ள தேவதானப்பட்டி பகுதியில் அருள்மிகு மூங்கில் அன்னை காமாட்சி அம்மன் கோவில் அமைந்துள்ளது. இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள இக்கோவில் காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கோவிலுக்கு அடுத்தபடியாக மிகவும் சிறப்பு வாய்ந்த ஆயிரம் ஆண்டுகள் பழமையான திருக்கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் மாசி மகா சிவராத்திரி இந்நிலையில் அருள்மிகு மூங்கிலணை காமாட்சி அம்மனுக்கு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு கம்பத்துக்கு நவதானியங்களை கொண்டு காப்பு கட்டி சிறப்பு பூஜைகள் நடைபெற்றது அதனைத் தொடர்ந்து மகா சிவராத்திரி திருவிழாமுன்னிட்டு கொடியேற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது மேலும் கோவில் வளாகத்தில் பக்தர்கள் தாங்கள் நேர்த்தி கடனை செலுத்தும் விதமாக பொங்கல் வைத்து மூங்கில் அன்னை காமாட்சி அம்மனுக்கு சிறப்பு பூஜைகள் செய்து வழிபாடு செய்தனர்.





■ சென்னை பெருநகர, மாநகராட்சி மாதவரம் மண்டலம் 3, அலுவலக வளாகத்தின் முன்பு 77 ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு தேசிய கொடியை மண்டல குழு தலைவர் நந்தகோபால் ஏற்றி வைத்து மரியாதை செய்தார். பின்பு தேசத் தலைவர் மகாத்மா காந்தி திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. மேலும் அரசு பள்ளி மாணவ மாணவிகள் தேசிய கீதம் பாடி உறுதிமொழி ஏற்றனர். மாணாக்கர்களுக்கு நோட்டு, பேனா வழங்கப்பட்டது. காலை உணவு, இனிப்புகள் வழங்கப்பட்டது. உதவி வருவாய் அலுவலர் லோகநாதன், செயற்பொறியாளர்கள் உதவி ஆணையர் முதுநிலை குமாரசுவாமி, ஆனந்த ராவ், உதவி செயற்பொறியாளர்கள் பாஸ்கர், குமார் உதவி பொறியாளர் சரவணமூர்த்தி, சுகாதார மண்டல நல அலுவலர் தேவி கலா, சுகாதார அலுவலர்கள் பெரிய கருப்பன், சிவஞானம், விஜய் குமார் மற்றும் அரசு அலுவலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். வருகை தந்த அனைவருக்கும் காலை உணவு, இனிப்பு வழங்கப்பட்டது.






# மண்ணிவாக்கத்தில் குடியரசு தினத்தை முன்னிட்டு 5 வயது முதல் வரை வரை 60 வயதான முதியோர் வரை செல்போன் பாதிப்பு குறித்து விழிப்புணர்வு

மண்ணிவாக்கம், ஜன.28-

செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூர் அடுத்த மண்ணிவாக்கத்தில் உள்ள டிராகன் ரியு ஆர்ட்ஸ் அகடாமி பள்ளியில் குடியரசு தினத்தை முன்னிட்டு குழந்தைகள் செல்போனை பார்பதால் ஏற்படும் தீமை குறித்தும், குழந்தைகளிடம் செல்போனை தவிர்ப்போம் என்பதை வலியுறுத்தியும் 5 வயது முதல் 60 வயது முதியோர் வரை சுமார் 30க்கும் மேற்பட்டோர் இந்த யோகா உலக சாதனை நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

நாட்டின் 76வது குடியரசு தினத்தை முன்னிட்டு சுமார் 26 நிமிடம், 26 நொடிகள் தொடர்ந்து குப்தபத்மாசனம், கர்பாசனம், சுத்த வஜ்ராசனம், மெத்தயாசனம் உள்ளிட்ட பல்வேறு யோகா ஆசனங்களை செய்து அசத்தினர்.

அதேபோல் 4வயது சிறுவன் கிரித்தீஷ் சுப்தவஜ்ராசனம் என்னும் யோகாவை சுமார் 30 நிமிடம் தொடர்ந்து செய்து தனிப்நபர் உலகசாதனை படைத்தார்.

இந்த சாதனையை நோவா புக் ஆஃப் யோகா ரெக்கார்ட்ஸ் இந்தியன் இயக்குனர் தீலிபன் சக்கரவர்த்தி, நடுவர் சுகந்தன் ஆகியோர் ஆய்வு செய்து உலக சாதனையாக அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்தனர். அதனை தொடர்ந்து சாதனை படைத்த மாணவ, மாணவியர்களுக்கு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட முன்னாள் ராணுவ வீரர் லோகேஸ்வரன், கராத்தே பயிற்சியாளர் ராஜினிகாந்த் ஆகியோர் சான்றிதழ், மற்றும் பதக்கங்களை வழங்கி பாராட்டினர்.

உலக சாதனை நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்திட மாணவர்களுக்கு யோகா குரு ராஜகோபால் பயிற்சி அளித்தார். இதற்கான ஏற்பாடுகளை டிராகன் ரியு ஆர்ட்ஸ் அகடாமி நிறுவனர் ரேணுகா தேவி சிறப்பாக செய்திருந்தனர். இதில் மாணவர்கள், பெற்றோர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



■ தேனி மாவட்டம் உத்தமபாளையம் சார்பு நீதிமன்ற வளாகத்தில் சார்பு நீதிமன்ற நீதிபதி உயர்திரு சிவாஜி செல்லையா அவர்கள் தலைமையில் 77வது குடியரசு தினவிழாவில் தேசியகொடி ஏற்றப்பட்டது.உடன் சார்பு நீதிமன்ற வழக்கறிஞர்கள் கலந்துகொண்டனர்.



■ மதுரை மாவட்டம் வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம் டி ஆண்டிபட்டி ஊராட்சியில் 77 வது குடியரசு தினத்தினை முன்னிட்டு ஊராட்சி செயலாளர் தனலட்சுமி தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதைசெலுத்தினார்.இந்நிகழ்வில் பள்ளி மாணவர்களுக்கு கிராம பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.



■ வேலூர் மாவட்டம் வேலூர் வட்டம் அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி, திருமலைக்கோடி, புகழ்பெற்ற வேலூர் ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி தங்க கோயில் ஸ்ரீ சக்தி அம்மாவின் ஆன்மீக திருத்தல வளாக ஸ்ரீ நாராயணி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மைய கல்லூரியில் குடியரசு தின விழா, கல்வி குழுமங்களின் சார்பில் குடியரசு தின விழா, ஸ்ரீ நாராயணி குழுமங்களின் இயக்குனர் முனைவர். பாலாஜி தேசிய கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினர், இவ்விழாவில் சிங்கப்பூரை சேர்ந்த ஸ்ரீ சக்தி அம்மாவின் அயல் நாட்டு பக்தர்கள் ஹோநிங்ஹெள, லிம்கிலைன், டிவைன் மற்றும் சுகி குழும இயக்குனர் ஸ்ரீ நாத், மருத்துவ கண்காணிப்பளர் மரு.கீதாஇனியன், கல்லூரி முதல்வர்கள் மரு.மாதவி, மரு.பிரபா. மருத்துவமனை துறைத் தலைவர்கள், கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள், அலுவலர்கள் பணியாளர்கள் மற்றும் ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி குழுமம் அலுவலர்கள் பணியாளர்கள் மற்றும் பக்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




# கீழக்கோட்டையில் மாணவர்களுக்கு காலணி மற்றும் காலுறைகள் வழங்கும் விழா

காளையார் கோவில் ஜன.28-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்திலுள்ள கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு காலணி மற்றும் கால் உறைகள் வழங்கும் விழா நடைபெற்றது விழாவிற்கு தலைமை ஆசிரியை செய்யவானை தலைமை வகித்தார். அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி முன்னிலை வகித்தார். கணித பட்டதாரி ஆசிரியை மீனாட்சி அனைவரையும் வரவேற்றார். காளையார்கோவில் ஒன்றியத்திலுள்ள புலியடிதம்பத்திற்கு அருகிலுள்ள கருவிக்கண்மாய் ஊரைச் சேர்ந்த ஜப்பான் டிமிஜி சிஸி டெக்னாலஜிஸ் நிறுவுனர் பிரபு அனைத்து மாணவ மாணவிகளுக்கும் தன்னுடைய சொந்த செலவில் ரூபாய் 70000 மதிப்புள்ள காலணி மற்றும் இரண்டு இணை காலுறைகளை வழங்கி சிறப்புரையாற்றினார். மாணவ மாணவிகள் ஷூ பெற்றுக்கொண்டு தங்களின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். சண்முகசுந்தரம் வாழ்த்துரை வழங்கினார். ஆங்கில பட்டதாரி ஆசிரியை கீதா நன்றி கூறினார். ஆசிரியைகள் கமலம்பாய் கணினி பயிற்றுநர் வித்யா சத்துணவு உதவி சமையலாளர் அஞ்சலை கஸ்தூரி கலந்துகொண்டனர்.

# புனித தோமையார் மலை ஒன்றியம் சித்தாலப்பாக்கம் ஊராட்சியில் 77 வது குடியரசு தின விழா

சித்தாலப்பாக்கம் ஜன.28-

செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார் மலை ஒன்றியம், சித்தாலப்பாக்கம் ஊராட்சியில்(26.01.26) அன்று 77 வது குடியரசு தின விழாவை முன்னிட்டு சித்தாலப்பாக்கம் ஊராட்சி ஒன்றிய அரசு பள்ளியில் சித்தாலப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர்., எஸ். ரவி தேசிய மூவண்ண கொடியை ஏற்றி மரியாதை செலுத்தி பள்ளி மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கினார். பின்னர் பள்ளி மாணவ, மாணவிகள் கலை நிகழ்ச்சி பேச்சுப்போட்டி சிலம்பாட்டம் பல்வேறு திறமைகளை பள்ளி மாணவர்கள் வெளிப்படுத்தினார் ஊராட்சி மன்ற தலைவர்





குடியரசு தினத்தின் வரலாற்றைப் பற்றியும் முக்கியத்துவத்தைப் பற்றியும் ஊராட்சி பள்ளிகளின் வளர்ச்சி பற்றியும் உரையாற்றினார். இந்த நிகழ்வில் பள்ளி தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், ஊராட்சி மன்ற துணைத் தலைவர், வார்டு உறுப்பினர்கள், பெற்றோர்கள் என திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர். பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள், பேனா பரிசுகளை வழங்கி சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது..



# பழனியில் இலவச வீட்டு மனை பட்டா கோரி காத்திருப்பு போராட்டம்

பழனி, ஜன.28

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே குமாரபாளையம், வயலூர், மிடப்பாடி, தாளையம், கீரனூர், கல்துறை, பனப்பட்டி உள்ளிட்ட கிராமங்களில் நிலமற்ற ஏழைகளுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்க வலியுறுத்தி காத்திருப்பு போராட்டம் நடைபெற்றது.

குமாரபாளையம் முத்த நாயக்கன்பட்டி பகுதியில் அரசு நிலங்களை தனிநபர்கள் ஆக்கிரமித்து வருவதாகவும், அவற்றை உடனடியாக மீட்டு நிலமற்றவர்களுக்கு பட்டா வழங்க வேண்டும் என்றும் போராட்டக்காரர்கள் கோரிக்கை வைத்தனர். மேலும், ஏழைகளுக்கு உதவாத வட்டாட்சியரை பணியிடை நீக்கம் செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

இந்த போராட்டம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தொப்பம்பட்டி ஒன்றிய தலைவர் சிவராஜ், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் கனேசன், கௌசல்யா, மாவட்ட செயலாளர் மணிகண்டன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இதில் நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் திரளாக கலந்து கொண்டனர்.

பின்னர் நடைபெற்ற அமைதி பேச்சுவார்த்தையில், தகுதி வாய்ந்த அனைவருக்கும் இலவச வீட்டு மனை பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அரசு நில ஆக்கிரமிப்புகள் வருவாய் துறையின் மூலம் விரைவில் அகற்றப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் கீழ் 3.59 லட்சம் மகளிருக்கு மாதம் ரூ.1,000 வழங்கப்பட்டு வருவதாக மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் தெரிவித்தார். குடியரசு தினத்தை முன்னிட்டு கொண்டேப்பள்ளி ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் அவர் இதனை தெரிவித்தார். மேலும், மாவட்டத்தில் உள்ள 333 ஊராட்சிகளிலும் கிராம சபை கூட்டங்கள் நடைபெற்று வருவதாகவும் கூறினார்.



■ கிருஷ்ணகிரி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் இரண்டாம் கட்டமாக 300 மாணவிகளுக்கு கண் கண்ணாடிகளை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் வழங்கினார். குடியரசு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற விழாவில் பள்ளி தலைமை ஆசிரியை நளினி வரவேற்றார். நகர திமுக பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேலுமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாமில் கண்டறியப்பட்ட பார்வை குறைபாடு கொண்ட மாணவிகளுக்கு முதல் கட்டமாக 2 ஆயிரம் பேருக்கு கண் கண்ணாடி வழங்கப்பட்டதாகவும், அதன் தொடர்ச்சியாக தற்போது இப்பள்ளியில் 300 மாணவிகளுக்கு வழங்கப்பட்டதாகவும் மதியழகன் எம்எல்ஏ. தெரிவித்தார். மேலும், மாணவிகள் செல்போன் பயன்பாட்டை தவிர்த்து கல்வியில் கவனம் செலுத்த வேண்டும் என்றும், ஆசிரியர்களின் வழிகாட்டுதலுடன் சிறந்த எதிர்காலத்தை உருவாக்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார். முன்னதாக மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.




■ கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் ஒன்றியத்திற்கு உட்பட்ட நாட்டாண்மை கொட்டாயில் அரசு உயர்நிலைப் பள்ளியில் 77வது குடியரசு தின விழா சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு பள்ளித் தலைமை ஆசிரியை மணிமேகலை தலைமை தாங்கினார். மாணவர்களுக்கிடையே நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும் மாவட்ட, வட்டார அளவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி பாராட்டப்பட்டது. முன்னாள் மாணவர் ராமநாதன் சார்பில் பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு கல்வி உதவி தொகுப்பு வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை பள்ளி ஆசிரியர்கள் செய்திருந்தனர்.




■ மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம் நாகமலை புதுக்கோட்டை ஊராட்சியில் 77 வது குடியரசு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கலைச்செல்வி அழகு பாண்டி, ஊராட்சி ஒன்றிய இளநிலை உதவியாளர் வடிவேல், வருவாய் அலுவலர் வீரராகவன், ஊராட்சி செயலாளர் கண்ணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்



■ மதுரை மாவட்டம் கிழக்கு ஊராட்சி ஒன்றியம் ஒத்தக்கடை ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர் சரஸ்வதி,சந்திரி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் செல்ல பாண்டி, செயலாளர் மணிகண்டன் ஆகியோர் கலந்து கொண்டனர்.இந்த கூட்டத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (MGNREGA) "விக்சித் பாரத் ரோஜ்கர் மற்றும் அஜீவிகா மிஷன் (கிராமின்)" என பெயர் மாற்ற மத்திய அரசு எடுத்துள்ள முடிவினை மாற்றக்கோரி இப்பகுதியைச் சார்ந்த காங்கிரஸ் கட்சியினர் மற்றும் பொதுமக்கள் வலியுறுத்தலின் பெயரில் தீர்மானம் நிறைவேற்றிட வலியுறுத்தப்பட்டது.

# இளம் மருத்துவர்கள் நோயாளிகளிடம் கனிவு காட்ட வேண்டும் நறுவீ மருத்துவமனை தலைவர் சம்பத் அறிவுரை

வேலூர், ஜன.28-

தங்களை நாடி வரும் நோயாளிகளிடம் பரிவுடன் நோயை தன்மை அறிந்து நோயை முற்றிலுமாக குணப்படுத்த வேண்டும் என்று வேலூர் நறுவீ மருத்துவமனை தலைவர் முனைவர் ஜி.வி. சம்பத் இளம் மருத்துவர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

இந்திய மருத்துவ சங்கத்தின் (Indian Medical Association) வேலூர் கிளையின் புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு மற்றும் பொங்கல் விழா மருத்துவ சங்க அறக்கட்டளை அரங்கில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு வருகை தந்தவர்களை மருத்துவ சங்கத்தின் வேலூர் கிளை தலைவர் டாக்டர் கே. வெங்கட்ரமணன் வரவேற்றார். சங்க செயலாளர் டாக்டர் எம். ஜெகதீசன் சங்கத்தின் ஆண்டறிக்கை வாசிக்க சங்க பொருளாளர் டாக்டர் சி. சுபாஷினி சங்க நிதி நிலை பற்றி விளக்கி கூறினார்.

நிகழ்ச்சியில் இந்திய மருத்துவ சங்கத்தின் வேலூர் கிளையின் புதிய தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ள டாக்டர் கே. சதீஷ்குமார், செயலாளர் டாக்டர் எம்.




ஜெகதீசன், நிதி செயலாளர் டாக்டர் எஸ்.பி. வசந்தராஜ், துணை தலைவர் டாக்டர் எம். தானேஷ் குமார் ஆகியோருக்கு சங்கத்தின் வடக்கு மண்டல துணை தலைவர் டாக்டர் டி. பூபதி ஜான் பதவி பிரமாணம் செய்து வைத்து அவர்களை வாழ்த்தி பேசினார்.

இந்நிகழ்வில் வேலூர் நறுவீ மருத்துவமனை தலைவர் முனைவர் ஜி.வி. சம்பத் கௌரவ விருந்தினராக பங்கேற்று புதிய நிர்வாகிகளை வாழ்த்தி பேசுகையில்: எனது இளம் வயது முதல் இந்திய மருத்துவ சங்கத்தின் வேலூர் கிளையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவன். வேலூரில் புகழ் பெற்ற சி.எம்.சி. மருத்துவமனை நூறு ஆண்டுகளுக்கு மேலாக மருத்துவ சிகிச்சை அளிப்பதில் முன்னிலை வகித்து வருகின்றது. பல மருத்துவமனைகள் உருவாகியுள்ளதற்கு சி.எம்.சி. மருத்துவமனை அடித்தளமாக உள்ளது பெருமைக்குரியது. உலகளவில் பல மருத்துவ நிபுணர்களை உருவாக்கிய பெருமை இம்மருத்துவமனைக்கு உண்டு.இன்றைய கால கட்டத்தில் மருத்துவ துறையில் பல்வேறு புதிய தொழில் நுட்பங்கள் வந்துள்ளன. குறிப்பாக சிறு மருத்துவமனை யிலிருந்து பலநோக்கு சிறப்பு மருத்துவமனைகள் பெருமளவில் வந்துள்ளன. தீர்க்க முடியாத பல்வேறு நோய்களுக்கு மருத்துவ அறிவியல் கண்டுபிடிப்புகள் மூலம் சிகிச்சை முறைகள் உருவாகி உள்ளன.

பல ஆண்டுகளுக்கு முன்பே டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி போன்றவர்கள் பெண்களின் உடல் ஆரோக்கியத்தில் அதிக அக்கறை செலுத்தி ஒரு புரட்சியை உண்டாக்கினார்கள். அமெரிக்க, ஐரோப்பிய மருத்துவ சிகிச்சை முறையையே உலக அளவில் பின்பற்றிய நிலை மாறி இன்று இந்திய நாட்டு மருத்துவ துறையில் உலகிற்கே வழி காட்டும் நிலை உள்ளது. உலகில் அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் உள்ள தலை சிறந்த மருத்துவர்கள் இந்தியர்களாக இருப்பது பெருமைப்படதக்கது.

இன்றளவில் மருத்துவ துறையில் ஏற்பட்டுள்ள சிறப்பான வளர்ச்சி இந்திய மற்றும் சிறந்த மருத்துவ சேவை அளிப்பதின் காரணமாக நாட்டிலேயே தமிழ்நாடு மருத்துவ துறையில் முதலிடம் பெற்றிருப்பது பெருமைக்குரியது. இன்றைய இளம் மருத்துவர்கள் தங்களை நாடி வரும் நோயாளிகளின் நோயின் தன்மை மற்றும் அறிகுறிகளை பொறுமையாக கேட்டு தக்க சிகிச்சை அளிக்க முன்வர வேண்டும் என்று அறிவுரை வழங்கினார்.

முன்னதாக மருத்துவர்கள் பங்கேற்ற பொங்கல் விழா நிகழ்வில் கோலமிடுதல், உறியடி, கயிறு இழுக்கும் போட்டிகள் நடைபெற்றது. நிகழ்வில் சங்கத்தின் முன்னாள் மாநில தலைவர்கள் டாக்டர் சடகோபன், டாக்டர் தாமோதரன் மற்றும் டாக்டர் மதன் மோகன், டாக்டர் அருளாளன், டாக்டர் முரளி, டாக்டர் சேந்தன், டாக்டர் அருள் பாரி உள்ளிட்ட மருத்துவர்கள் மற்றும் குடும்பத்தினர் பங்கேற்றனர். முடிவில் சங்க நிதி செயலாளர் டாக்டர் எஸ்.பி. வசந்தராஜ் பங்கேற்றார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161